இருந்த எக்ஸைஸ் ட்யூட்டியையே தற்போதும் நிர்ணயம் செய்ய நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைதலைவர் அவர்களே, இது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடமும் சிறு தொழில் துறை அமைச்சரிடமும் கேட்கவேண்டிய கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எஃபெக்ட் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் மீண்டும் ஒருமுறை இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கிராமத் தொழில் துறை அமைச்சரின் மூலமாகக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எஃபெக்ட் எல்லாம் நிறைய இருக்கின்றது.

5. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார் பிலே பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மை யால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த அறிக்கை அளிக்கப்படுகின்றது. அறிக்கையின் இரு நகல்கள் சட்ட மன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. அரசினர் தீர்மானம்.

விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேலவை விவாதத்திலே கலந்து கொள்ள வேண்டி இருப்பதன் காரணத்தால் அத்துறை சம்பந்தப்பட்ட சட்ட முன் வடிவுகளைத் தள்ளி வைத்து மற்றைய அதற்கடுத்திருக்கின்ற சட்ட முன் வடிவுகளை வரிசையாக எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக இத்தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

பேரவையின் விதி 30 உள்விதி 3-ன் கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் திருதம்